கந்தளாய் பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கந்தளாய் பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கந்தளாய் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால்

இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஆயுர்வேத களஞ்சியம் விநியோகிக்கும் பதிவேட்டினை விட ரூபா 184,858 தொகை கணக்குகளில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சரியான ஆயுர்வேத பெறுமதியை கணக்குகளில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	வேறுபாட்டை அடையாளம் கண்டு கணக்குகள் சீர் செய்யப்பட வேண்டும்.
(ஆ)	கந்தலாவ ஆயுர்வேத மத்திய நிலையத்தின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இறுதி மீதி ரூபா 418,403 ஆக காணப்பட்ட போதிலும் கணக்குகளில் ரூபா 16,690 என காட்டப்பட்டிருந்ததால் இருப்பு பெறுமதி ரூபா 401,713 இனால் குறைவாக நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.	சரியான இருப்பு பெறுமதியை கணக்குகளில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	-மேற்படி--
(இ)	கம்போஸ்ட் நிலயத்தின் எஞ்சியுள்ள வேலைக்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,922,896 தொகை கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை.	2025 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	கணக்குகள் சீர் செய்யப்பட வேண்டும்.

(ஈ)	வாகன தரிப்பிடத்தின் நிர்மாண பணி தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய மற்றும் கிடைக்கப் பெற வேண்டிய தொகை ரூபா 1,734,519 ஐ கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கணக்குகளின் கீழ் கணக்கிடப்ப ட்டிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டு இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	-மேற்படி-
(உ)	பெறுமதி ரூபா 24,086,581 உடைய நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்க வில்லை.	எதிர்வரும் ஆண்டு இறுதிக் கணக்கு தயாரிக்கப்படும் போது கணக்குகளில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	-மேற்படி-
(ஊ)	பிரதேச அபிவிருத்தி உதவி செயற்கிட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 797,092 தொகை கிடைக்கப் பெறவேண்டிய மீதி ஒன்றாக கணக்கிடப்பட்டிருக்க வில்லை	எதிர்வரும் வருடத்தில் இறுதி கணக்குகள் தயாரிக்கப்படும் போது கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	கணக்குகள் சீர் செய்யப்பட வேண்டும்.
(எ)	நிலையான வைப்புக்களுக்காக கிடைக்கப்பெற வேண்டிய வட்டி ரூபா 309,558 ஆக காணப்பட்ட போதிலும் அது கணக்கில் 226,560 ஆக காட்டப்பட்டிருந்ததால் கடன் பட்டோர் ரூபா 82,998 ஆள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	சரியான பெறுமதியை கணக்கிட்டு எதிர்வரும் வருடத்தில் இறுதி கணக்குகள் தயாரிக்கப்படும் போது கணக்குகளில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	-மேற்படி-

1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆம் திகதியில் கணக்கு விடயங்கள் 10 இன் கணக்கின் பிரகாரம் மீதி மற்றும் உப பதிவேட்டின் பிரகாரம் மீதிக்கும் இடையில் ரூபா 5,872,773 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது.	சரியான பெறுமதிகளை முன் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	வேறுபாட்டை அடையாளம் கண்டு சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 329,731,728 ஆன பெறுமதியான 07 கணக்கு விடயங்களுக்காக சாட்சிகள் சமர்ப்பிக்கப்படாமையினால் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாமல் இருந்தது.	சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதி 07இன் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாக உரிய விடயத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களை அறிவுறுத்தப்பட்டிருப்பதுடன் 2024 ஆகஸ்ட் 01ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வு ஐய வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள உப பதிவேட்டை தயாரிப்பதற்கு மற்றும் விடய பரப்பிற்குரிய ஆவணங்களை தயாரித்து இற்றைப் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	கணக்கு மீதிகளை சான்றுறுதிப் படுத்தக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணங்காமை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்			
(i)	24 பிரிவு	சபைக்கு சொந்தமான பாதைகளை இனங்கண்டு அவற்றை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பாதைகளின் இன்வெண்டிரியில் உள்ள குறைபாடுகளை அடையாளம் கண்டு சபைக்கு உரித்தான பாதைகளை வருத்தமானியில் பிர சுரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக.	பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii)	134 பிரிவு	அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேசங்களை காலத்திற்கு காலம் இனங்கண்டு வீதவரி அறவிட வேண்டிய போதிலும் 1980 ஆண்டிற்கு முன்னர் இனங்கண்ட பிரதேசங்களிற்காக மாத்திரம் வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	2008 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 2024 ஆம் வருடத்திற்காக வீத வரி அறவிடப்பட்டதுடன் 2025 ஆம் வருடத்திலிருந்து 2016 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 04 கோட்டங்களுக்கு உரியவற்றை அறவிட்டுக்கொண்டிருப்பதாக	பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(iii)	152 பிரிவு	தமது அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள வங்கி, நிதி கம்பனிகள், அடகு வியாபாரங்கள் மற்றும் சட்ட ஆலோசனை போன்ற தொழில்கள் தொடர்பாக கணிப்பீடொன்றை மேற்கொண்டு வரி அறவட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வங்கி, நிதி கம்பனிகள், அடகு வியாபாரங்கள் மற்றும் சட்ட ஆலோசனை போன்ற தொழில்கள் தொடர்பாக கணிப்பீடொன்றை மேற்கொண்டு வரி அறவட நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(iv)	153(1) பிரிவு	பிரதேச சபை அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை அடையாளம் கண்டு அதன் பிரகாரம் வரி அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை அடையாளம் கண்டு அதன் பிரகாரம் வரி அறவிட்டு கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஆ)	1989 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 554/5 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி			
(i)	53 ஆம் விதி	சபை அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள அனைத்து வருமான மூலங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்றை மேற்கொண்டு அறிக்கை தயாரிக்க வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பாதீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக.	பிரதேச சபை நிதிய விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	218 ஆம் விதி	கிரயம் ரூபா 225,545,244 ஆன காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு முறை கணிப்பீடு செய்திருக்கவில்லை.	கணிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக தேவையான வழிமுறைகளை பின்பற்றி கணிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	பிரதேச சபை நிதிய விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	நீதிமன்ற அமைச்சின் செயலாளரின் இலக்கம் 04/1994 மற்றும் 1994 பெப்ரவரி 18 திகதிய சுற்றறிக்கையின் விதி 32	ஒவ்வொரு பதவிநிலை உத்தியோகத்தரினாலும் வருடாந்தம் தமது சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்த வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதவி நிலை உத்தியோகத்தர்களிடமிருந்து வருடாந்தம் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை பெற்றுக் கொள்வதற்கு எதிர்வரும் வருடங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	நீதிமன்ற அமைச்சின் சுற்று நிறுவனத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஈ)	2018 இன் 19 ஆம் இலக்கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு	நிதி அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் வருடத்தின் போது நிதி அறிக்கை உடன் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்பதாக	கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,272,266 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,849,567 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தவிசாளரினால் சமர்ப்பிக்'கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

	2024				2023			
வருமான மூலம்	**மதிப்பிடப் பட்ட வருமானம்**	**பில் போடப்பட்ட வருமானம்**	**சேர்க்கப்ப ட்ட வருமானம்**	**திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை**	**மதிப்பிடப் பட்ட வருமானம**	**பில் போடப்பட்ட வருமானம**	**சேர்க்கப்பட்ட வருமானம**	**திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை**
	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
வீதவரி	5,275	2,283	1,709	15,276	7,752	3,151	1,547	14,278
வாடகை	5,574	18,351	15,561	9,270	28,589	5,946	4,205	6,480
ஏனைய வருமானம்	70	3,368	7,693	512	475	2,259	-	8,205
கூட்டுத் தொகை	**10,919**	**24,002**	**24,963**	**25,058**	**36,816**	**11,356**	**5,752**	**28,963**

2.2.1 வருமானத்தை சேகரிப்பதற்கான செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஆண்டிறுதியில் 23 கடையறைகளில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை கடையறை வாடகை ரூபா 2,824,194 ஆனதுடன் அவற்றின் ரூபா 1,691,962 ஆன தொகை இரண்டு ஆண்டுகளிற்கும் அதிக காலமாக நிலுவையாக காண்பிக்கப்பட்டது.	நிலுவை மற்றும் வருடத்திற்கு அற விடப்பட வேண்டிய மீதிகள் அறவிடப்பட்டு கொண்டு இருப்பதாக	நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும்.
(ஆ)	1987 இன் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(அ) பிரிவின் பிரகாரம் பிரதேச சபையினுள் நிறுவப்பட்டுள்ள நிலையான அல்லது பயிர் நிலத்தின் கீழ் ஒவ்வொரு காணியின் ஹெக்ரேயர் அடிப்படையில் ஆதன வரி அறவிடப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஆதன வரியை அறவிட்டுக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டு வரியை அறவிட்டுக் கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	வருமானங்களை அதிகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	சபை அதிகார பிரதேசத்திலுள்ள அரச திணைக்களங்களிற்கு சொந்தமான ஆதனங்கள் தொடர்பாக அறவிட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 2,529,800 பெறுமதியான வீதவரி அறவிடப்படாது காண்பிக்கப்பட்டது.	அரச திணைக்களங்களிடமிருந்து நிலுவையாக உள்ள தொகையை தாமதமின்றி அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக.	குறித்த திணைக்களன்களை தொடர்பு கொண்டு நிலுவையாக உள்ள தொகையை துரிதமாக அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் விதிக்கப்பட்ட செயல்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் பிரதான 28 விடயங்களை நிரைவேற்ற துணைச் சட்டம் விதிக்கப்பட வேண்டியிருந்த போதும் 2024 திசெம்பர் 31 திகதி வரை 05 விடயங்களிற்கு மாத்திரம் துணைச் சட்டம் விதிக்கப்பட்டிருந்தது.	05 விடயங்களுக்காக துணை சட்டம் விதிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய விடயங்களுக்காகவும் துணை சட்டத்தை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்க தேவையான செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக	பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
அதிகாரப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சாணிகள் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அந்த பணிகள் வினைத்திறனான முறையில் இடம்பெற்றிருக்கவில்லை.	காணிகளின் உரிமத்தை உறுதிப் படுத்திக் கொள்ளுதல் பிரச்சனைக்கு உரிய காரியம் ஒன்றாக காணப்பட்டதுடன் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்ப படிவங்களின் அளவு குறைவானதாகும். எதிர்காலத்தில் கலப்பரிசீலனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு கிடைக்கின்ற விண்ணப்பங்களின் அளவுகளை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	காணிகள் அபிவிருத்தி நடவடிக்கைகள் வினைத்திறனாக ஒழுங்கு படுத்தப்பட வேண்டும்.

3.3 ஏனைய அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 19(XII) ஆம் பிரிவின் பிரகாரம், சபைக்கு உரித்தான காணியில் அல்லது கட்டிடத்தில் ஒரு பகுதியை 03 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் போது, உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரிடம் முன் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.	அலுவலகத்தின் கட்டிடத்தின் கூரையை திருத்தம் நடவடிக்கை மேற்கொள்ள தேவை இருந்ததுடன் சோலா பவர் சிஸ்டம் பொருத்துவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை என்பதாக உள்ளூராட்சி	வருமானங்களை ஈட்டிக் கொள்ளக் கூடிய வகையில் ஒப்பந்தங்கள் திருத்தப்பட்டு சட்ட அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இருப்பினும் 20 வருடங்களுக்கு அதிகமான நீண்ட கால குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் குறித்த விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரம் இன்றி சபையின் கட்டிடத்தின் கூரையில் சூரிய மின்சக்தி பொருத்துவதற்கு சினோ லங்கா பவர் ஜெனரல் தனியார் கம்பெனிக்கு வழங்க தீர்மாணிக்கப்பட்டிருந்தது.	ஆணையாளர் அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக.	

3.4 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அங்கீகார ஆளணியினர் மற்றும் உள்ளவாறான ஆளணியினரை கவனத்திற் கொள்ளும் போது 12 பதவிகளில் 25 வெற்றிடங்கள் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டன. இந்த வெற்றிடங்களை துரிதமாக நிரப்பி கொள்வதற்கு அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	180 நாட்கள் நியமனங்களின் மூலம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வெற்றிடங்களை முறையாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நிதி பிரமாணம் 880 மற்றும் கிழக்கு மாகாண நிதி சுற்று நிருபத்தின் PT/03/2021 பிரகாரம் பிரதேச சபையில் சேவையாற்றுகின்ற பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள்/ஊழியர்கள் 20 நபர்களிடமிருந்து தேவைக்கேற்ப பிணை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	இந்த வருடத்தில் பிணை பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக.	மாகாண நிதி சுற்று நிருபத்தின் பிரகாரம் குறித்த உத்தியோகத்தர்களிட மிருந்து பிணை பணத்தை வைப்பில் இடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்
(இ)	சேவையில் இருந்து விலகிச் சென்ற 03 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 411,664 ஆன தொகை 05 வருடங்களை விட அதிக காலம் ஆக அறவிடப்படாமல் காணப்பட்டது.	நிலுவை கடன் தொகையை அறவிட்டு கொள்ளுதல் தொடர்பாக சட்ட அறிவுரைகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக.	கடனை மீண்டும் அறவிட்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் உள்ளக கணக்காய்வு அலகொன்றை இஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் நடைமுறை ஆண்டில் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறே உள்ளக கணக்காய்வு திட்டமொன்றை தயாரித்து தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அங்கீகாரத்தை பெறப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் உள்ளக கட்டமைப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	உள்ளக கணக்காய்வை முறையாக்க வேண்டும்.

4.2 பாதீட்டு கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப் பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 06 வருமான விடயங்களில் 21.57 சதவீதம் முதல் 90.70 சதவீதம் வரையும் 05 செலவின விடயங்களிற்காக 20.91 சதவீதம் முதல் 72.89 சதவீதம் வரையும் விலகல்கள் அவதானிக்கப்பட்டததனால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்தப் படவில்லையென அவதானிக்கப்பட்டது.	எதிர்வரும் பாதீட்டினை தயாரிக்கும் போது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனம் ஒன்றாக ஈடுபடுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	பாதீடு நடைமுறைக்கு சாத்தியமானதாக தயாரிக்கப்பட வேண்டும்.

4.3 சுற்றாடல் பிரச்சினை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளாததன் காரணமாக வன விலங்குகள் கழிவுகளை உண்பதற்காக பாதைகளுக்கு வருவதனால் பாதைகள் நெருக்கடிக்குள்ளாகுதலின் அடிப்படையில் விலங்குகளும் அதே வேளை பிரதேசவாசிகளும் பிரச்சனைக்குரிய நிலைமைக்கு முகம் கொடுத்துள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.	கழிவுகளை முறையாக அகற்றும் போது தேவையான வசதிகள் இல்லாமையின் காரணமாக இந்த பிரச்சனைக்குரிய நிலைமைகள் தோன்றியுள்ளதுடன் எதிர்காலத்தில் ஏற்பாடுகள் ஒன்று ஒதுக்கப்பட இருப்பதுடன் அதனூடாக மிகவும் கழிவு முகாமிற்குமொன்றை திட்டமிட்டு அதன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதாக.	கழிவுகளை அகற்றுவதற்காக பொருத்தமான நடைமுறை ஒன்றை பின்பற்ற வேண்டும்.